செய்தித்தாளில் வெளிவந்தவை

சரித்திர பூர்வமான கூட்டமொன்று இலங்கை மத்திய வங்கியிலே இடம்பெற்றது. இதில் ஆளுனர் - திரு.அஜித் நிவார்ட் கப்ரால் அவர்கள் தலைமையில கூடிய போது செலான் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.அஜித பஸ்குவல் அவர்களோடு கூட்டு முகாமைத்துவமும் வங்கியின் புதிய பணிப்பாளர்களான திரு.E.நாரங்கொட(தலைவர்) திரு.லலித் விதான,திரு.நிஹால் ஜயமான்ன PC மற்றும் திரு.நோமல் குணவர்தன ஆகியோர் கூடினர். இக்கூட்டத்தில் உதவி ஆளுனர் திரு.W.A.விஜயவர்தன மற்றும் உதவி ஆளுனர் கலாநிதி.திருமதி.ராணி ஜயமஹா, அவரோடு இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு சபையின் அலுவலர்களும், இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி திரு.காமினி விக்கிரமசிங்க தலைமையில்,பொது முகாமையாளர் திரு.B.A..C.பர்ணாந்து, மற்றும் சிரேஷ்ட உதவிப் பொது முகாமையாளர் செல்வி.W.A.நாலனி ஆகியோரும் கலந்துரையாடலில் பங்குபற்றினார்கள்.

அண்மையில் செலான் வங்கி வைப்பாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை ஈடுசெய்யும் வகையில், செலான் வங்கியின் தலைமைத்துவத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதோடு செலான் வங்கியின் புதிய பணிப்பாளர் சபையை அமைப்பதற்கும் இலங்கை வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கியின் துணையோடு செயற்பட மத்திய வங்கியின் நாணயசபை இறுதியாக முடிவெடுத்துள்ளது.அத்துடன் நிதிநிலைமையை ஸ்திரப்பாட்டுடன் வைத்துக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியும் மத்திய வங்கியின் நாணயசபையும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய நடைமுறையானது வங்கித்துறையில் பொது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. வங்கி வியாபாரத் தொழிலில் பரந்தளவில் செயற்படும் இலங்கை வங்கியானது செலான் வங்கியின் வங்கி வியாபாரத் தொழிலுக்கு பின்னின்று மேலும் வலுவூட்டுகிறது.எனவே பொதுமக்களும் குறிப்பாக செலான் வங்கியின் வாடிக்கையாளர்கள் தமது வங்கி "வியாபாரத் தொழிலிலை எதுவித தடையுமின்றி இடைவிடாது செய்யலாம்.

மேலும் தேசமான்ய கலாநிதி லலித் கொத்தலாவல அவரகள் செலான் வங்கித்துறை வளர்ச்சிக்கு ஆற்றிய சேவைக்கு இலங்கை மத்திய வங்கி ஆளுனர் நன்றி கூறினார்.